# இடர்கால வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

# கல்விப்பொதுத்தராதர உயர்தரம் - தமிழ் (72)

தரம் - 12 ஆசிரியை : திருமதி.R.ரேணுகா தேவி

வாரம் - 10 இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்

தவணை - 03

---

தேர்ச்சி : 1.0 தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத்திறன் உள்ளவராக செயற்படுவார்

தேர்ச்சி மட்டம் : 1.3 எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்தி பண்போடு பேசுவார்

விடயம் : மானுடம் தழுவிய கவிஞர்கள்

எழுதியவர் - பேராசிரியர்.க.கைலாசபதி

**பிரதான கருத்து**

- மானுடம் கேடின்றி வாழ்வதற்கு, இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற உணர்வுடன், தமது படைப்புக்கள் மூலம் கற்பனை உலகைப்படைக்க முற்பட்ட வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி ஆகியோர் மகா கவிகள் என மதிக்கப்படுகின்றனர்.

**கவிஞனின் பொதுவிலக்கணம் பற்றிய கட்டுரையாசிரியரின் கருத்துக்கள்**

- சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலியவற்றை கவிதையில் கையாளல்.
- உணர்வில் தாக்கமுண்டாக்கி வாழ்க்கைக்கு புதுவிளக்கத்தை தரவல்ல பாடு பொருள்களை கவிதையிற் கொண்டிருத்தல்.
- தத்தம் அனுபவங்களின் துணை கொண்டு கவிபாடல்

**“மானுடம் தழுவிய கவிஞர்கள்” எனும் கட்டுரையை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1) கட்டுரையின் பிரதான கருத்தை வலியுறுத்துவதற்கு கட்டுரையாசிரியர் கையாண்ட துணைக்கருத்துக்கள் எவை?

2) பாரதியார் பற்றிய கட்டுரையாசிரியரின் மதிப்பீடு யாது?

3) பெருங்கவிஞர்கள் பற்றிய கட்டுரையாசிரியரின் வரையறை எத்தகையது?

4) வள்ளுவர், கம்பன், இளங்கோ, பாரதி ஆகியோர் மகாகவிகள் என மதிக்கப்படுவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?